Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 13, 2021

செவ்வாய்க்கிழமை ஜூலை 13, 2021 | ஒளி: 07 கதிர்: 46 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## இலங்கை தமிழ் மாணவன் தமிழகத்தில் கின்னஸ் சாதனை



தமிழகத்தின் கும்மிடிப்பூண்டி இலங்கை தமிழர் அகதிகள் முகாமைச் சேர்ந்த இலங்கை மாணவனான ரஞ்சன் திவ்வியேஷ் (வயது 16) கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

டிம்பாசனம் மூலம் ஒரு நிமிடத்தில் 34 பலூன்களை உடைத்து இந்த கின்னஸ் சாதனையை நிகழ்த்தியுள்ளதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### அத்தியாவசிய சேவைக்கு மட்டும்:

## 'மாகாணங்களுக்கு இடையில் நாளை முதல் போய் வரலாம்'

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை முற்றாகத் தளர்த்தி, பொதுப் போக்குவரத்து சேவையை விரைவில் முழுமையாக ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், அத்தியாவசிய சேவைகளைக் கருத்திற்கொண்டு மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து சேவைகளை, வரையறுக்கப்பட்ட ரீதியில் நாளை (14) புதன்கிழமை முதல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, நேற்று (12) தெரிவித்தார்.

எனினும், அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோருக்கு மாத்திரம் இந்தப் பொதுப் போக்குவரத்து சலுகை வழங்கப்படவுள்ளது எனத் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

# டெல்டாவை தேடி வேட்டை

அதிக வீரியம் கொண்ட டெல்டா கொரோனா தொற்று தொடர்பான ஆய்வுகள், நேற்று (12) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம், ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பீடத்தின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். இதற்கமைய, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் 96 பேரின் மாதிரிகள் ஊடாக இந்த ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

தொடர்ச்சி P2



### 'பாடசாலைகளை

## கட்டம் கட்டமாக ஓகஸ்டில் திறக்கவே முயல்கின்றோம்'

கொவிட்-19 தாக்கத்தால் கல்வித்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை ஒருபோதும் ஈடுசெய்ய முடியாதெனத் தெரிவித்த கல்வி அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், "ஆசிரியர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதைத் துரிதப்படுத்தி, சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய, பாடசாலைகளைக் கட்டம் கட்டமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் திறக்க எதிர்பார்த்துள்ளோம்" என்றார்.

நாரஹேன்பிடியவில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் ஆசிரியர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி முதற்கட்டமாக செலுத்தும் நடவடிக்கைகள், நேற்று (12) முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## தூது செல்பவரை தாக்குவோர் உள்ளனர்



எரிபொருள்களின் விலைகளைக் குறைப்பதாகக் கூறுகின்றவர்கள், விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கின்றார்கள். அவ்வாறானவர்கள் சிறந்த திட்டங்கள் எதையும் இதுவரையில் முன்வைக்கவில்லை எனத் தெரிவித்த வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில, வாழ்க்கைச் செலவுகள் தொடர்பிலான அமைச்சரவை உப-குழுவின் தீர்மானத்தை மாத்திரமே நான் பகிரங்கப்படுத்தினேன் என்றார். பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### 344 கிலோ கிராம்

## கஞ்சா மூடைகளுடன் யாழில் மூவர் கைது

டி.விஜித்தா

காங்கேசன்துறையில், 344 கிலோ 560 கிராம் நிறையுடைய கஞ்சா பொதிகளுடன் மூவர், நேற்று (12) கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## துமிந்த நாகமுவவின் மனைவி மனுத்தாக்கல்



முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவவின் மனைவி துலானி பிரியங்கிகா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ள போதிலும் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்ட தனது கணவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு அம்மனுவின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தமிழ்மிரர் வீடியோவை அடுத்து ஜீவன் அதிரடி நடவடிக்கை

முழுச் செய்தி P2



## 'நால்வர் அடங்கிய குடும்பத்தின் கடன் ரூ.6 இலட்சமாகக் கூடியது'

நாட்டை சுபீட்சமாக்குவதாக கூறிக்கொண்டு வந்த அரசாங்கம், நால்வர் அடங்கிய குடும்பமொன்றை கடந்த 15 மாதங்களுக்குள் 6 இலட்சம் ரூபாய் கடனாளியாக்கியுள்ளது எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, இந்தக் கடன் சுமை இன்னும் அதிகரிக்குமே தவிர, குறையாது என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே,

தொடர்ச்சி P2

## பெசிலால் பின்னே சென்றார் சந்திரசேன



நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கு, சபையில் முதல்வரிசையில் ஆசனத்தைக் கொடுப்பதற்காக, காணியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, தனது விருப்பத்தின் பேரில், இரண்டாம் வரிசைக்குச் சென்றுவிட்டார்.

அவர், ஆளும் கட்சியின் பக்கத்தில் முதலாம் வரிசையில் 19ஆவது ஆசனத்திலேயே அமர்ந்திருந்தார். நிதியமைச்சருக்கு முதல் வரிசையில் ஆசனத்தை ஒதுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, தனது விருப்பத்தின் பேரிலேயே அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, இரண்டாவது வரிசைக்குச் சென்றுள்ளார் என பாராளுமன்ற படைக்கல சேவிதர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'உரத்தை கண்டால் 1977க்கு அழைக்கவும்'

உரத்தை மறைத்துவைத்திருப்போர் தொடர்பில் தகவல்கள் கிடைக்குமாயின், அவ்வாறானவர்கள் குறித்து உடனடியாக அறிவிக்குமாறு, நுகர்வோர் விவகார அதிகார சபை, பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

1977 என்ற துரித இலக்கத்துக்கு அழைத்து அறிவிக்க முடியும்



தொடர்ச்சி P2

## வாள்வெட்டில் முடிந்த கோவில் பிரச்சினை

எம்.றொசாந்த், டி.விஜித்தா

யாழ்ப்பாணம், சித்தங்கேணி சிவன் கோவில் நிர்வாகத்துடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் (11) இடம்பெற்றுள்ளது.

அந்தக் கோவில் வளாகத்துக்குள் வைத்தே, இந்த வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோவில் நிர்வாகத்தில் உள்ள ஒருவருக்கும் மற்றுமொருவருக்கும் இடையில் கோவில் நிர்வாகம் தொடர்பில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இந்த வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில், கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்தவரை மற்றைய நபர் தன் உடைமையில் மறைத்து வைத்திருந்த வாளால் வெட்டிவிட்டு,

தொடர்ச்சி P2

## சட்டவிரோத கருக்கலைப்பு; தாய் மரணம்

எம்.கிருஸ்ணா

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோரா தோட்ட மேற்பிரிவிலுள்ள வீடொன்றில், நான்கு பிள்ளைகளின் தாயொருவர் (வயது 36) திடீரென இறந்துள்ள சம்பவமொன்று, அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று (12) காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில், தகவலறிந்து, அவ்வீட்டுக்குச் சென்ற பொலிஸார், வீட்டிலிருந்த இரத்தக்கறை படிந்த ஆடைகள் சிலவற்றையும் மீட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2





## 'செல்பி' எடுக்க முயன்ற 11 பேர் மின்னல் தாக்கி மரணம்

மின்னல் தாக்கத்தால் குறைந்தது 11 பேர், ஒரேநாளில் உயிரிழந்த சம்பவமொன்று, இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்ப்பூர் நகரில் இடம்பெற்றுள்ளது.

அவர்களுடன் சேர்த்து மேலும் பலர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மழை பெய்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில், அமர் கோட்டையிலுள்ள (12th Century Amer Fort) மணிக்கூட்டுக் கோபுரத்தின் மேலே ஏறி, செல்பி எடுக்க முற்பட்ட வேளையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## குடும்பம் கும்மியதில் தந்தை மரணம்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, பெண், பெண்ணின் கணவன் ஆகியோர் இணைந்து தடியால் தாக்கியதில், இரண்டு பிள்ளைகளின் தந்தையான 28 வயதான நபரொருவர் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம், மினிபோ, ஹசலக அத்தேஎல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை அடுத்து, நால்வரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

தொடர்ச்சி P2



## உள்ளே


பொத்துவில்13 முடங்கியது P4

மன்னாரில் தடுப்பூசியை பெறவந்த பலருக்கு ஏமாற்றம் P4

'நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம்' P5

யூரோ: பெனால்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி இத்தாலி சம்பியன் P8

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘மாகாணங்களுக்கு இடையில் நாளை முதல் போய் வரலாம்’

“அத்தியாவசிய தேவை” என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களை வைத்திருப்பது அவசியமாகும் என்றார்.

அத்துடன், இந்த அத்தியாவசிய போக்குவரத்துச் சேவைக்காக பஸ் மற்றும் ரயில் சேவைகள் சிலவற்றையும் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ‘கட்டம் கட்டமாக ஓகஸ்டில் திறக்கவே முயல்கின்றோம்’

அதனை மேற்பார்வை செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“பாடசாலைகளை விரைவாக திறக்க பல்வேறு மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன” என்றார்.

நாடு தழுவிய ரீதியிலுள்ள 2 இலட்சத்து 48 ஆயிரம் ஆசிரியர்களுக்கு கொவிட் -19 தடுப்பூசி செலுத்தும் முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர், பல்வேறு காரணிகளை முன்வைத்து ஒரு

> **கற்பித்தலுக்கும் இடையில் பாரிய வேறுப்பாடுகள் காணப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், தொலைநோக்கு கல்வி முறைமை மாணவர்களுக்கு முழுமையான கற்றலை வழங்காது என்றார்**

சில ஆசிரிய சங்கத்தில் உள்ள ஆசிரியர்கள் இணையவழி முறைமை ஊடான கற்பித்தல் நடவடிக்கையிலிருந்து விலகியுள்ளனர் என்றார்.

வகுப்பறை கற்பித்தலுக்கும், தொலைநோக்கு முறைமையிலான கற்பித்தலுக்கும் இடையில் பாரிய வேறுப்பாடுகள் காணப்படுகின்றன எனத் தெரிவித்த அவர், தொலைநோக்கு கல்வி முறைமை மாணவர்களுக்கு முழுமையான கற்றலை வழங்காது என்றார்.



# டெல்டாவை தேடி வேட்டை

நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆய்வின் பெறுபேறுகளை எதிர்வரும் ஒரு வாரத்துக்குள் சுகாதார சேவை பணிப்பாளரிடம் கையளிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் இதுவரை 20 பேர் டெல்டா தொற்றுக்குள்ளாகி உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதில் அதிகமானவர்கள், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ள அவர், இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களுள் பலர் குணமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

# ‘தூது செல்பவரை தாக்குவோர் உள்ளனர்’

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்கும் அதிகாரம் வலு சக்தி அமைச்சர் என்ற ரீதியில் எனக்குக் கிடையாது எனத் தெரிவித்த அவர், பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் வெளியிட்ட அறிக்கையே அரசாங்கத்துக்குள் காணப்படும் முரண்பாட்டை பகிரங்கப்படுத்தியது என்றார்.

“இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியினர் தனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்துள்ளார்கள். அதனை சிறந்த முறையில் வெற்றி கொள்ள முடியும்” என்றார்.

“அரச காலத்தில் தூது செல்பவர் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் நிலைமையே தற்போது உள்ளாகியுள்ளேன். அனைத்து தாக்குதல்களையும் சிறந்த முறையில் வெற்றி கொள்ள முடியும்” என்றார்.

# ‘உரத்தை கண்டால் 1977க்கு அழைக்கவும்’

என அதிகார சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

“நாட்டின் பல பகுதிகளிலும், வர்த்தகர்கள் உரத்தை மறைத்துவைத்துள்ளதாக அதிகார சபைக்குத் தகவல் கிடைத்துள்ளது” என்றார்.

# கஞ்சா மூடைகளுடன் யாழில் மூவர் கைது

இந்தியாவில் இருந்து கடல்வழியாக கஞ்சா கடத்தி வருவதாக இலங்கை கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே, காங்கேசன்துறை கடலில் வைத்து, இந்த கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த இலங்கை கடற்படையினர், விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் அம்மூவரும் கையளிக்கப்படவுள்ளனர் என்றார்.

# துமிந்த நாகமுவவின் மனைவி மனுத்தாக்கல்

அத்துடன், அவரை உடனடியாக விடுவிக்குமாறும் உத்தரவிடுமாறு கோரி ஆட்கொணர்வு மனுவின் ஊடாக கோரியுள்ளார்.

ஜூலை 7 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்துகொண்டிருந்த தனது கணவர் உள்ளிட்ட 08 பேர், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கொம்பனித்தெரு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

அதன் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் விதிமுறைகளை பயன்படுத்தி, தனது கணவர் உள்ளிட்ட 06 பேர் பல்லேகலையிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது நடத்தப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையில் தனது கணவருக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், அவர் தொடர்ந்தும் அங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மனுவில், பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன், கொம்பனித்தெரு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி, பல்லேகல தனிமைப்படுத்தல் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# ‘நால்வர் அடங்கிய குடும்பத்தின் கடன் ரூ.6 இலட்சமாக கூடியது’

அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், “ராஜபக்‌ஷ அரசாங்கம், தனது ஆட்சியில் 15 மாதத்துக்குள் நபரொருவரை ஒரு இலட்சம் 50,000 ரூபாய் கடனாளியாக்கியுள்ளது” என்றார்.

பொருளாதார தெளிவற்ற ராஜபக்‌ஷ குடும்பம் சுற்றாடல், பொருளாதாரம், விவசாயம், கல்வி உள்ளிட்ட அனைத்தையும் அழிப்பதாகவும் அவர், தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்‌ஷ, மஹிந்த ராஜபக்‌ஷ, பஷில் ராஜபக்‌ஷ, நாமல் ராஜபக்‌ஷ, சமல் ராஜபக்‌ஷ, ஷசீந்திர ராஜபக்‌ஷ உள்ளிட்ட ராஜபக்‌ஷ குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து நாட்டை ஆட்சி செய்தாலும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சக்தி அவர்களுக்கு இல்லை என்றார்.

# செல்பி எடுக்க முயன்ற 11 பேர்...

இந்தச் சந்தர்ப்பத்தில் மணிக்கூட்டுக் கோபுரத்தின் மீது 27 பேர் இருந்துள்ளனர். எனினும், மின்னல் தாக்கம் ஏற்பட்டதை அறிந்து கொண்டவர்களில் பலர், கீழே பாய்ந்துவிட்டனர் என்றும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

“உயிரிழந்தவர்களில் அதிகமானோர் இளைஞர்கள்” என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் மின்னல் தாக்கி சராசரியாக சுமார் 2,000 பேர் உயிரிழக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# வாள்வெட்டில் முடிந்த கோவில் பிரச்சினை

அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

குறித்த நபர் தப்பியோடும் போது, அவர் கொண்டு வந்திருந்த வாள் தவறி விழுந்துள்ளது. அதனை அங்கிருந்தவர்கள் மீட்டு, வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை, வாள்வெட்டுக்கு இலக்கான நபரையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் வட்டுக்கோட்டை பொலிஸார், சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

வாள்வெட்டை மேற்கொண்டவர், திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்தவரென விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சட்டவிரோத கருக்கலைப்பு; தாய் மரணம்

அத்துடன், கூட்டொன்றுக்குள் இருந்து சுமார் 7 மாதங்கள் மட்டுமே மதிக்கத்தக்க பெண் சிசுவொன்றின் சடலத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

வீட்டுக்குள் வைத்து மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான கருக்கலைப்புக் காரணமாகவே, இவ்விரு உயிரிழப்புகளும் இடம்பெற்றிருக்கலாமென சந்தேகிக்கும் பொலிஸார், மரணமடைந்த பெண்ணுடன் அடிக்கடி தொடர்பை பேணிவந்த 35 வயதான பெண்ணொருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

தடயவியல் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், ஹட்டன் மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் மரண விசாரணை இடம்பெற்றதன் பின்னர், பிரேத பரிசோதனைக்காக சடலம், டிக்கோயா-கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவுள்ளது.

## இலங்கை தமிழ் மாணவன் தமிழகத்தில்...

உக்ரைனைச் சேர்ந்த இளம் பெண் க்ருடாஸ் ருசியானா டிம்பாசனம் மூலம் பின்புறமாக ஒரு நிமிடத்தில் 24 பலூன்களை உடைத்து நிலைநாட்டியிருந்த கின்னஸ் சாதனையையே இந்த மாணவன் முறியடித்துள்ளார்.

5 வருட யோகா பயிற்சியின் விளைவாக திவ்வியேஷ் டிம்பாசனம் மூலம் ஒரு நிமிடத்தில் 34 பலூன்களை உடைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடும்பம் கும்மியதில் தந்தை...

இதன்போது, நால்வரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹியங்கனை நீதவான் நீதிமன்றம் உத்தரவை பிறப்பித்துள்ளது.

சம்பவத்தில் தாக்குதல்களுக்கு உள்ளான, இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுனில் நிஷங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 06ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்து, குறித்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வந்தார். இந்நிலையில் கடந்த 08ஆம் திகதியன்று அவ்விளைஞன் உயிரிழந்துள்ளார்.

# தமிழ்மிரர் வீடியோவை அடுத்து ஜீவன் அதிரடி நடவடிக்கை





கண்டி மாவட்டத்திலுள்ள சில பின்தங்கிய பிரதேச மக்களுக்காக 4 மில்லியன் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் வழங்கியுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உதவிச் செயலாளரும் இராஜாங்க அமைச்சின் பரஜாசக்தி அபிவிருத்தித் திட்டத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக குறித்த பிரதேசத்திலுள்ள மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு அல்லற்படும் அவலநிலையை தெரிவிக்கும் வீடியோ ஒன்றை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தமிழ் மிரர் மற்றும் டெய்லி மிரர் ஊடகங்கள் தமது இணைய தளத்திலும் சமூக ஊடகத்திலும் வெளியிட்டிருந்தன.

இந்த வீடியோவை வெளியிட்டு இவ்விடயத்தை தனது கவனத்துக்குக் கொண்டுவந்தமைக்கு தமிழ் மிரர் மற்றும் டெய்லிமிரருக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், தனது நன்றியைத் தெரிவித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ள பாரத் அருள்சாமியின் மூலமாகவே மேற்குறிப்பிட்ட நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.









அம்பக்கோட்டே, அலுத்வத்த, ரணகால, கெங்கல்ல, பன்வில்ல, கெல்லபொக்க, தெல்தோட்ட, கலகா மற்றும் நாவலப்பிட்டிய ஆகிய பிரதேசங்களுக்கு பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# 26,000 ஃபைசர் வந்தடைந்தன

இலங்கை கொள்வனவு செய்த மேலும் 26,000 ஃபைசர் தடுப்பூசிகள், நேற்று (12) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

அமெரிக்காவிலிருந்து கட்டாருக்கு விமானத்தில் கொண்டு செல்லப்பட்ட இந்தத் தடுப்பூசிகள், பின்னர் அங்கிருந்து காலை 2.35 மணியளவில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இதனையடுத்து, இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஃபைசர் தடுப்பூசியின் எண்ணிக்கை 52,000 அதிகரித்துள்ளது.

இலங்கைக்கு இதுவரை மொத்தமாக 8571,000 கொவிசீல்ட், சினோபார்ம், ஸ்புட்னிக் V, பைசர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




# தடுப்பூசி முற்பதிவுக்கு இணையத்தளம்

மேல் மாகாணத்தில் வசிப்போர், கொவிட்- 19 தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வற்காக முற்பதிவுகளை மேற்கொள்வதற்கான இணையத்தளத்தை, சுகாதார அமைச்சு அறிமுகம் செய்துள்ளது.

அதன் அடிப்படையில், கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வசிப்போர், https://vaccine.covid19.gov.lk. என்ற இணையதத்தள முகவரியின் ஊடாக முற்பதிவுகளைச் செய்யலாம் என அமைச்சு அறிவித்துள்ளது.



# நோர்வே தூதரகம் இடம்மாறியது

கொழும்பிலுள்ள றோயல் நோர்வே தூதரகம், இதுவரை காலமும் இயங்கிய புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு - 7 எனும் முகவரியிலிருந்து, கொழும்பு 2 இல் அமைந்துள்ள அலுவலகத் தொகுதிக்கு இடம்மாறியுள்ளது.

இதன் பிரகாரம், தூதரகத்தின் அலுவலகம் 5ஆம் மாடி, M2M கட்டடம், இல. 34, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2 எனும் முகவரியில் இயங்கும்.

அதேவேளை, தற்போதைய கொவிட்-19 தொற்றுப் பரவலுடனான சூழ்நிலை காரணமாக, தூதரகத்தின் ஏதேனும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, முற்பதிவை மேற்கொள்வது அவசியமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# படமெடுத்த வைத்தியருக்கு 16 வரை விளக்கமறியல்

## மேலும் இரு குற்றச்சாட்டுகளும் வெளியாகின

பெண் வைத்தியர் ஒருவர், தனது தங்கும் விடுதியில் ஆடைமாற்றும் போது, புகைப்படங்களை எடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வைத்தியரை, எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, வெலிசர நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராகம வைத்தியர் விடுதியில், பெண் வைத்தியர் ஒருவரின் அறைக்குள் அத்துமீறிப் புகுந்து அவர் ஆடை மாற்றும்போது புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டின் கீழ், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணி புரிந்த குறித்த வைத்தியர் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, நேற்று (12) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலவசக் கல்வியை

# ‘இராணுவ மயமாக்க இடமளியோம்’




எஸ்.கணேசன்

“இலவசக் கல்வியை தனியார், இராணுவ மயப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அதற்கு எதிராகக் கல்விச் சமூகத்தின் போராட்டம் தொடருமெனத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் வேலு இந்திரச்செல்வன், பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

10 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து நுவரெலியாவில் நேற்று (12) நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே, இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

“மாணவர்களுக்கான இலவசக் கல்வி உரிமையை பாதுகாத்துக்கொள்வதற்காக நாம் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வந்திருக்கின்றோம். அந்தவகையில் இலவசக் கல்வியைத் தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்க்கின்றோம். சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகம் தொடர்பான சட்டமூலத்தை மீளப்பெறுமாறு வலியுறுத்தி, முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது எமது சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது ஜோசப் ஸ்டாலினுக்கான போராட்டம் மட்டும் அல்ல; இலங்கை வாழ் மாணவர்களுக்கான போராட்டமும் கூட. இலவசக் கல்வியைக் காக்க நாம் தொடர்ந்தும் போராடுவோம். ஒன்லைன் கல்வியில் இருந்து விலகியுள்ளோம். நியாயம் கிடைக்கும் வரை அப்போராட்டம் தொடரும்” என்றார்.

இணையவழி விலகலுக்கு

# கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்களும் ஆதரவு

கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர்களும் இணையவழி கற்பித்தலில் இருந்து விலகியுள்ளனர்.

இணையவழி கற்பித்தலில் இருந்து விலகுவதாக பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் எடுத்துள்ள முடிவை ஆதரித்து, இவர்கள் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக முன்னெடுக்கப்பட்டு வந்த இணைய மூலமான கற்பித்தலில் இருந்து நேற்று (12) முதல் விலகவுள்ளதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தங்களது பிரதிநிதிகள் மனிதாபிமானமற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்து, தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தொழிற்சங்க போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், அதிபர் சேவையாளர் சங்கம் உள்ளிட்ட 23 சங்கங்கள் ஆதரவு வழங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை பெண்களை வலுவூட்ட அமெரிக்கா நிதியுதவி

சிறு வர்த்தகங்களுக்கு உதவியளிப்பதற்கும் இலங்கை பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கும் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய அமெரிக்கா வழங்கியுள்ளது.

இது குறித்து இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதரகம், நேற்று (12) வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் ஏற்படுத்திய பொருளாதார சவால்களை சமாளிப்பதற்கு, இலங்கையில் உள்ள சிறு வர்த்தகங்கள் முயலும் இவ்வேளையில் அவற்றுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவியளித்து வருவதாக, அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது, உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையை முன்னேற்றுவதற்கும், தனியார் துறை முதலீட்டை வலுப்படுத்துவதற்கும், பெண் தொழில் முனைவோருக்கும் உதவியளிப்பதற்கும் இலங்கையில் டீஎவ்ஸிஸி வங்கிக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கியுள்ளது.

இக்கடனின் ஒரு பகுதி, இலங்கை பெண்களுக்குச் சொந்தமான அல்லது அவர்களது தலைமையிலான சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

இது குறித்து இலங்கை, மாலைதீவுக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.டெப்லிட்ஸ் தெரிவிக்கையில், “பொருளாதார ரீதியாக வலிமையடைந்த பெண்கள் தங்களை மேம்படுத்துவதோடு, குடும்பங்கள், சமூகங்கள், நாடுகளையும் மாற்றுகிறார்கள். சமூகங்கள் முன்னேற்றமடைய வேண்டுமாயின், வளங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கான அணுகல்கள் பெண்களுக்கு இருத்தல் அவசியம்” என்றார்.



# மெய்ப்பாதுகாவலருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கனகராசா சரவணன்

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலரின் விளக்கமறியல் உத்தரவை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம், எதிர்வரும் 26ஆம் திகதிவரை நீடித்துள்ளது.

ஜூன் மாதம் 21ஆம் திகதியன்று, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலரால் இராஜாங்க அமைச்சரின் வீட்டுக்கு முன்னால் வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மகாலிங்கம் பாலசுந்தரம் (வயது 34) என்பவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் வழக்கு, நேற்று (12) விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, குறித்த நபரை, கொரோனா காரணமாக நீதிமன்றத்துக்கு அழைத்து வரமுடியாமை தொடர்பில் நீதவானின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்தே, விளக்கமறியல் உத்தரவு 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

ஜே.வி.பி தொழில் சங்கத்தினர்

# தீப்பந்தங்களுடன் படகுகளில் ஏறினர்

எம்.இஸட்.ஷாஜஹான்

பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து, ஜே.வி.பி தொழிற்சங்கத்தினர், தீப்பந்தங்களுடன் படகுகளில் ஏறி, விநோதமான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், அவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு, மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை, மக்களின் வாழ்வாதாதாரப் பிரச்சினை, கொரோனா பரவல் உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து, நீர்கொழும்பு, கொத்தலாவல பாலத்துக்கு அருகில் இருந்து நீர்கொழும்பு வரை, நேற்று முன்தினம் (11) இரவு இந்த ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

அகில இலங்கை பொது மீனவர் சங்கத்தின் உறுப்பினரும் நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பெர்ணான்டோ, நீர்கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வைத்தியர் ஹென்ரி றொஸைரோ ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.





வீடமைப்பு அதிகார சபையில் வெற்றிடங்கள்;

# அறிக்கை சமர்ப்பிக்க கோப் குழு பணிப்பு

தேசிய வீடமைப்பு அதிகார சபையில் 2021ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி 688 வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், அவற்றை விரைவில் பூர்த்திசெய்வதற்கு முகாமைத்துவத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத், குறித்த அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்தார்.

நிறுவனத்தின் உயர் நிர்வாக மட்டத்தில் 154 வெற்றிடங்கள் காணப்படுவது தொடர்பிலும், 46 மேலதிக பதவிகள் குறித்தும் குழுவின் தலைவர் அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினார். மூன்றாம் நிலை மட்டத்தில் 116 வெற்றிடங்களும் 218 மேலதிக பதவிகளும் காணப்படுவது எவ்வாறு எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

நிறுவனமென்றில் நிலவக்கூடாத நிலைமையொன்றே இங்கு காணப்படுவதாகவும், இது தொடர்பில் விரைவில் ஆராய்ந்து ஒரு மாத காலத்துக்குள் குழு முன்னிலையில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு, கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அபேவர்த்தனவுக்கு, கோப் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை உரிய முறையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பது தொடர்பிலும் கோப் குழு விசேட கவனம் செலுத்தியது.

அத்துடன், நிறுவனத்தின் செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய வருடாந்த கொள்முதல் திட்டம், மனிதவள அபிவிருத்தித் திட்டம், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பவை உள்ளடக்கப்படாமை குறித்தும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று அதிகாலையிலான

# முடக்கமும் விடுவிப்பும்



நாட்டில் மேலும் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள், நேற்று (12) அதிகாலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அதன்படி, அம்பாறை, கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஐந்து கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாறையில் பொத்துவில் 13 கிராம சேவகர் பிரிவு, கண்டியில், சுதுஹம்பல மேற்கு, கிழக்கு, யாழ்ப்பாணத்தில் வடமராட்சி வடக்கு, கொழும்பில் பிலியந்தலை பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, நுவரெலியா, குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று அதிகாலை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.



கொச்சிக்கடை நகர

# போக்குவரத்து நெரிசலுக்கு உடனடித் தீர்வாக 4 ஒழுங்கைகள்

## நிமல் லன்சா தெரிவிப்பு

நீர்கொழும்பு, கொச்சிக்கடைபிரதேசத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு, உடனடியாகத் தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளாரெனத் தெரிவித்த கிராமிய வீதிகள், உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, கொச்சிக்கடை நகர எல்லைக்குள் ஏற்படும் வாகன நெரிசலுக்குத் தீர்வாக, கொச்சிக்கடை பாலத்துக்கு அருகாமையிலிருந்து கொழும்பு நோக்கி, ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு 4 ஒழுங்கைகளின் கீழ் விரிவாக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். இது தொடர்பில், நேற்று (12) இப்பகுதிக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கொச்சிக்கடை நகரில் ஏற்படும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியின் கீழ் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். இதில் வர்த்தகர்கள், பொலிஸார், அரசாங்க நிறுவனங்களின் கருத்துகள், அபிப்பிராயங்களையும் பெற்று, இந்த பிரதேசத்துக்கான பெறுமதியை வழங்கவுள்ளோம் என்றார்.

மன்னாரில் தடுப்பூசியைப் பெறவந்த

# பலருக்கு ஏமாற்றம்

## விடுபட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்கத் துரித நடவடிக்கை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இரண்டு பாடசாலைகளில், நேற்றும் (12) நேற்று முன்தினமும் (11) மேற்கொள்ளப்பட்ட பைசர் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளின் போது, பல மணி நேரம் காத்திருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு, தடுப்பூசி செலுத்தப்படவில்லை என, பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில், வெள்ளிக்கிழமை (09) தலைமன்னாரில் முதல் கட்டமாக 'பைசர்' கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள கரையோர பகுதிகளில் வசிக்கும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பைசர் கொரோனா தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைய, மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் தாழ்வுபாடு, பட்டித்தோட்டம், எழுத்தூர், எமில் நகர், சாவற்கட்டு, பனங்கட்டுக்கொட்டு மேற்கு,





பனங்கட்டுக் கொட்டு கிழக்கு, சின்னக்கடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும், மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் பெரியகடை, மூர்வீதி, உப்புக்குளம் வடக்கு, உப்புக்குளம் தெற்கு, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை மேற்கு, சௌத்பார் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் 11,12 ஆகிய 2 தினங்கள் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பைசர் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும் என, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மன்னார் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன அறிவித்தல்களை வழங்கி இருந்தன.

குறித்த அறிவித்தல்களுக்கு அமைவாக, மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்கு உரிய நிலையங்களுக்கு, ஞாயிற்றுக்கிழமை (11) காலை சென்று, நீண்ட வரிசையில் நின்று தமக்கான தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்கள், தமக்கு உரிய நிலையங்களுக்கு நேற்று (12) காலையே சென்றுள்ளனர்.

நீண்ட வரிசையில் பல மணிநேரம் நின்ற அவர்களை, தடுப்பூசி முடிந்துவிட்டதாகக் கூறி, அங்கிருந்த அதிகாரிகள் திருப்பி அனுப்பியதாக, பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதனிடம் வினவிய போது,

மன்னார் மாவட்டத்துக்கென வழங்கப்பட்ட 20 ஆயிரம் பைசர் கொரோனா தடுப்பூசிகளில் உயிலங்குளம், முருங்கன் ஆகிய பகுதிகளில் உள்ள வயோதிபர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், மேலும் 20 ஆயிரம் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# பொத்துவில் - 13 முடங்கியது

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பொத்துவில்-13 பாக்கியத்தை கிராம சேவையாளர் பிரிவு, நேற்று (12) காலை 6 மணி தொடக்கம் மறுஅறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள கிராம சேவையாளர் பிரிவில் வசிப்பவர்கள் வெளியிடங்களுக்குச் செல்லுவது மற்றும் வெளியிடங்களில் வாசிப்பவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்துக்குள் பிரவேசிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்- 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனை அறிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேசத்தில் கடந்த 09ஆம், 10ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 47 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.



பொத்துவில் கொரோனா விசேட தடுப்புச் செயலணியினரின் விசேட கூட்டம், பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.யு. அப்துல் சமட் தலைமையில், மேற்பார்வை-பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ் எம். அப்துல் மலிகின் ஒருங்கிணைப்பில் சுகாதார வைத்திய அதிகாரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டுள்ளன.




## விழிப்புணர்வு...


■ எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன், என்.ராஜ்

யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில், 'கவனம், அபாயம், அவதானம்' எனும் தொனிப்பொருளில், கொரோனா விழிப்புணர்வு செயற்பாடொன்று, யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால், நேற்று (12) காலை முன்னெடுக்கப்பட்டது.

இதில், யாழ். மாவட்டச் செயலாளர், மதத் தலைவர்கள் கலந்துகொண்டு, கொரோனா வைரஸ் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

## வெடிக்காத எறிகணை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



முல்லைத்தீவு, பாலைபாணி குளக்கட்டுப் பகுதியில், நேற்று (12), வெடிக்காத நிலையில் எறிகணையொன்று காணப்பட்டுள்ளது.

இதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக, அப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாங்குளத்தில்

## காணாமல்போன சிறுவன் கண்டுபிடிப்பு

■ செ.கீதாஞ்சன்



மாங்குளம் - துணுக்காய் வீதி, உதயசூரியன் நகர் பகுதியில், சனிக்கிழமை (10) இரவு காணாமல் போயிருந்த 14 வயது சிறுவன், நேற்று முன்தினம் (11) வீடு திரும்பியுள்ளார்.

இது குறித்து கருத்துரைத்த சிறுவன், "நான் குளிக்கச் சென்றவேளை, யாரோ என்னைக் கூப்பிட்டது போல இருந்தது. அதனால், நான் காட்டுக்குள் சென்று பார்த்தேன். இதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. அதன் பின்னர், கொக்காவில் காட்டுப்பகுதியில் வெளியேறினேன். என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. எவ்வாறு காட்டுக்குள் சென்றேன் என்றும் தெரியாது" என்றும் சிறுவன் கூறினார்.

குறித்த காட்டுப்பகுதியில் காட்டுப் பேய் இருப்பதாக, பிரதேச மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



திருமுறிகண்டி குளம்

## 10 வருடங்களின் பின்னர் புனரமைப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், ஆறு மில்லியன் ரூபாய் செலவில், முல்லைத்தீவு - திருமுறிகண்டி குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள திருமுறிகண்டி குளம், கடந்த 10 வருடங்களுக்கும் மேலாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செல்வபுரத்தில்

## வீடு புகுந்து கொள்ளை

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, செல்வபுரம் பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து, உட்புகுந்த கொள்ளையர்கள், வீட்டில் இருந்த மூன்று இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற நேரத்தில், வீட்டில் எவரும் இருக்கவில்லை என, முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (11) அதிகாலை, செல்வபுரம் பகுதியில் உள்ள மாதா தேவாலயத்தில் ஆராதனைக்காக, வீட்டார் சென்றிருந்த போதே, இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக

## மாணவர்கள் இருவருக்குத் தொற்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கு, கொரோனா வைரஸ் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் உட்பட்ட 185 பேருக்கு, சனிக்கிழமை (09) பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவர்களில் 173 பேருக்கு தொற்றில்லை என்றும் 12 பேர் மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவுகள் வெளிப்படுத்தியிருந்தன.

இந்நிலையில், நேற்று முன்தினம் (11), யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மீளவும் 12 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் முடிவுகளின் அடிப்படையில் மாணவன் ஒருவரும், மாணவி ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே மேலும் ஒருவருக்கு மீளவும் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று மருத்துவ அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

## வீதி வேண்டாமென வேண்டுகோள்

■ வி.ரி.சகாதேவராஜா

காரைதீவுக்குட்பட்ட நன்செய் நிலப்பிரதேசத்தில் அவசர அவசரமாக முன்னெடுக்கப்படும் கார்பெட் வீதிப் பணிகளை உடனடியாக நிறுத்தவேண்டுமென காரைதீவின் பொதுநல அமைப்புகள் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளன.

ஜனாதிபதி, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருக்கு எதிர்ப்பு மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சௌபாக்ய தக்ம திட்டத்தின்கீழ் 1 இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தில் காரைதீவு எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளியிலிருந்து வயல் பிரதேசத்தினூடாக கல்முனை வரையுள்ள 5 கிலோ மீற்றர் நீள அணைக்கட்டு வீதியை கார்பெட் வீதியாக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காரைதீவு மேற்குப் பிரதேச வயல் காணிகளுக்குத் தேவையான தண்ணீர்பெறும் வசதிகொண்ட இந்நன்செய் நிலப்பிரதேசம், கார்பெட் வீதிக்காக பயன்படுத்தப்பட்டால், எதிர்காலத்தில் விவசாயிகள் பாதிப்படைவதோடு, ஊருணியில் வெள்ளம் தேங்கி அபாயத்தை தோற்றுவிக்கும் துரதிர்ஷ்டநிலை உருவாகும் என்று கூறப்படுகிறது.

மக்களது அபிப்பிராயம் கோரப்படாது, காரைதீவு பிரதேச செயலாளர், தவிசாளரிடம் எந்த அனுமதியையோ, கலந்துரையாடலையோ செய்யாமல் விவசாயிகளுக்கு தீங்கிழைக்கக்கூடிய வகையில் இவ்வீதியை அமைப்பதை தாம் எதிர்ப்பதாக பொதுநல அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.



தடுப்பூசி செலுத்துவதில்

## வர்த்தகர்களுக்கும் முன்னுரிமை வழங்கவும்

■ நூருல் ஹுதா உமர்

கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளின் போது, வர்த்தகர்களுக்கும் வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென, சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஹஜ்ஜுப் பெருநாள் காலத்தில் வர்த்தக நிலையங்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென அறிவுறுத்தும் கலந்துரையாடல், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அல்-அமீன் ரிசார்ட் தலைமையில், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்றது. இதன்போதே, மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டு, அதற்கான கடிதமும் ஒப்படைக்கப்பட்டது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, எதிர்வரும் வாரங்களில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரிவுக்குள் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க இருப்பதாக அறியமுடிகின்றது. இங்குள்ள வர்த்தகர்கள் பலர், வெளிநாடுகளுக்குச் சென்று பொருள்களை கொள்வனவு செய்பவர்களாகவும், இவர்களும் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களும் தினமும் கொரோனா அச்சுறுத்தலை எதிர்நோக்கியவர்களாகவே உள்ளனர். எனவே, இவர்களையும் முன்னரங்க பணியாளர்களாக கருதி முன்னுரிமை வழங்குமாறு கேட்கப்பட்டிருந்தது.



தொற்றாளர்களால்

## சிரமதானம் முன்னெடுப்பு

■ ஏ.எல்.எம்.ஷினாஸ்

அம்பாறை மாவட்டத்தின் பாலமுனை கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் சிரமதான பணி, நேற்று (12) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அடையாளம் காணப்பட்ட வைத்தியசாலையை அண்டிய பகுதிகள் சிரமதானம் செய்யப்பட்டதுடன், வைத்தியசாலை கட்டடத்தின் உள்ளகப் பகுதிகளும் துப்புரவு செய்யப்பட்டன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த சமூகப்பணியை, மக்கள் வரவேற்றுள்ளதுடன், தமது பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடியில்

## தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

■ எல்.ரி.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு, காத்தான்குடியில் தனிமைப்படுத்தப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 7,630 குடும்பங்களுக்கு, அரசாங்கத்தால் 10,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதற்கென 7 கோடியே 63 இலட்சம் ரூபாயை அரசாங்கம் செலவிட்டுள்ளதாக காத்தான்குடி பிரதேச செயலாளர் எம்.உதயசிறீதர் தெரிவித்தார்.

முதல் கட்டத்தில் 5,000 ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டத்திலும் 5,000 ரூபாய் பெறுமதியான நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

முடக்கப்பட்ட 8 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் மக்களுக்கு இந்நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாரம்பரிய உணவு விற்பனை ஆரம்பம்

■ ஹஸ்பர் ஏ ஹலீம், ஏ.எம்.ஏ.பரீட், ஒலுமுதீன் கியாஸ், அ.அச்சுதன்



திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராளவின் தலைமையில், திருகோணமலை மாவட்டச் செயலக வளாகத்தில் பாரம்பரிய உணவு விற்பனை நிலையம், நேற்று (12) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

உள்ளாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட இப்பாரம்பரிய உணவகத்தை, திருகோணமலை மாவட்ட மகளிர் சம்மேளனம் ஏற்று நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனூடாக இடியப்பம், ரொட்டி, இட்லி உள்ளிட்ட பல வகையான உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக

# ‘வழக்குத் தாக்கல் செய்வோம்’

## இ.தே.தோ.தொழிலாளர் சங்கம்

பெருந்தோட்ட மலையக மக்களுக்கு எதிராகச் செயற்படும் நிர்வாகங்களுக்கு எதிராக, எதிர்வரும் காலங்களில் மனித உரிமை மீறல் வழக்குத் தொடரத் தயாராவதாக பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று (11) கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

இத்தகைய அடாவடி

> **அடாவடி செயற்பாடுகளில் ஈடுபடும் அதிகாரிகளின் பெயரிலும் தோட்ட நிர்வாகங்களின் பெயரிலும் தனித்தனியாக மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படும்**

செயற்பாடுகளில் ஈடுபடும் அதிகாரிகளின் பெயரிலும் தோட்ட நிர்வாகங்களின் பெயரிலும் தனித்தனியாக மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் என்ற ரீதியில் கூடிய விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

மலையகப் பெருந்தோட்ட நிர்வாகங்கள் நாட்டினுடைய தொழில் சட்டத்தை மீறி செயற்படுவதால் தொழிலாளர்களின் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் மன உளைச்சலுடனும் அழுத்தத்துடனும் தங்களுடைய தொழில் உரிமைகளையும் கௌரவத்தையும் இழந்து வாழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், பெருந்தோட்ட நிர்வாகங்கள் மாறவில்லை. ஆகவே, நாம் அவர்களை மாற்றுகின்றோம் என்றார்.



# ‘அசேதன பசளை குறித்து அச்சம் தவிர்’

## நுவரெலியா மாவட்ட செயலாளர் உறுதி

■ ஆ.ரமேஸ். டி.சந்ரு.

நுவரெலியா மாவட்ட மரக்கறி உற்பத்தியாளர்களுக்கு, ஒகஸ்ட் மாத இறுதியில் அசேதன பசளை தடையின்றி வழங்கப்படும் எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, எனவே, பசளை தட்டுப்பாடுகள் தொடர்பில் மரக்கறி உற்பத்தியாளர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார்.

அசேதன பசளை தட்டுப்பாட்டால் நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி உற்பத்தியாளர்கள், எதிர் நோக்கும் பிரச்சினை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

அரசாங்கம் அசேதன பசளைக்குத் தடைவிதித்து கூட்டுப்பசளையை எதிர்வரும் காலங்களில் விவசாய நடவடிக்கைகளுக்கு பாவிக்க அறிவித்திருந்தது. நாட்டில் நஞ்சற்ற உணவு உற்பத்தியை நடைமுறைப்படுத்தவே அரசாங்கம் இத்தகைய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதெனத் தெரிவித்த அவர், நுவரெலியா மாவட்ட உற்பத்தியாளர்கள், தாம் உற்பத்தி செய்யும் மரக்கறிகளுக்கு அசேதன பசளையை பழக்கப்படுத்தியுள்ளனர்.

அதை படிப்படியாக குறைத்து, கூட்டுப்பசளையிட்டு விவசாயத்தை எதிர்வரும் காலத்தில் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றதுடன், குறித்த காலப்பகுதிக்குள், அசேதன பசளையின் அவசியத்தை பல தரப்பினரும் தனக்கு சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.



> **நுவரெலியா மாவட்ட உற்பத்தியாளர்கள், அசேதன பசளையை பழக்கப்படுத்தியுள்ளனர். அதை படிப்படியாக குறைத்து, கூட்டுப்பசளையிட்டு விவசாயத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்**

மஸ்கெலியா பிரதேச சபையின்

# எதிர்க்கட்சியினர் அமைதிப் போராட்டம்

■ எம்.கிருஸ்ணா

மஸ்கெலியா பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுபேர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கறுப்புப்பட்டி அணிந்து, அமைதிப் போராட்டமொன்றை நேற்று (12) முன்னெடுத்திருந்தனர்.

சபை அமர்வுகள் பிரதேச சபையின் தவிசாளர் எஸ். செண்பகவள்ளி தலைமையில், இடம்பெற்ற நிலையிலேயே, சுமார் 30 நிமிடங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் இந்த அமைதிப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தியும், போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், மலையகத்தில் தடுப்பூசி திட்டத்தை துரிதப்படுத்துமாறு அழுத்தம் கொடுத்துமே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதேபோல ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், ஊடக அடக்குமுறைக்கு இடமளிக்கமுடியாது எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் கோஷமெழுப்பினர்.



# விபத்தில் இருவர் காயம்

■ எஸ்.கணேசன்

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ரொசிட்டா பண்ணைக்கு அருகாமையில், நேற்று (12) காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுங்காயமடைந்துள்ளனர்.

கொட்டகலை நகரிலிருந்து லொக்கீல் நோக்கி பயணிப்பதற்கு தயாரான வானொன்றின் மீது, மோட்டார் சைக்கிளொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோதியுள்ளது. இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுங்காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும், கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த பத்தனை பொலிஸார், விபத்து தொடர்பில், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.



தியகல– நோட்டன் வீதி

# போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது

■ இரா.யோகேசன்

கினிகத்ஹேன- தியகல சந்தியிலிருந்து, நோட்டனுக்குச் செல்லும் பிரதான பாதையில் மண்மேடு சரிந்ததால், தடைப்பட்டிருந்த போக்குவரத்து நேற்று (12) வழமைக்குத் திரும்பியது.

> **தொடர்ச்சியாக மழை பெய்தால், குறித்த வீதியில் பயணிப்போர் அவதானமாகச் செல்லவும்**

தியகல சந்தியிலிருந்து 300 மீற்றருக்குள் ஏற்பட்ட மண்சரிவால், 2 நாள்களாக குறித்த வீதியில் போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் மண்மேட்டை அகற்றி, போக்குவரத்தை வழமைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

தொடர்ச்சியாக மழை பெய்யுமானால், அவ்வீதியில் மண்சரிவுகள் ஏற்படும் அபாயம் ஏற்படும் என்பதால், குறித்த வீதியில் பயணிக்கும் வாகன சாரதிகள் அவதானமாக பயணிக்குமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.



# சிறுமி துஷ்பிரயோகம்: ‘1990’ இன் சாரதி கைது

■ ஆ.ரமேஸ்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்கம் பிரதேசத்தில் 15 வயதான சிறுமியொருவரை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், 25 வயதான நபரொருவரை நேற்று முன்தினம் (11) இரவு மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில், இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர், மொனராகலை- ஈரிய வீரப்புர பகுதியை சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர், மஸ்கெலியா பிரதேசத்தில் 1990 அவசர சேவை அம்பியூலன்ஸின் சாரதியாகப் பணியாற்றி வருவதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில், சிறுமியின் பெற்றோர், மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் இந்த மாதம் 9ஆம் திகதி, முறைப்பாடு செய்துள்ளனர். அதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமையவே, சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், சிறுமி கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதித்துள்ளதுடன், சந்தேகநபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ‘ஆசிரியர்களை வீதிக்கு இறக்கி அழகு பார்க்கக் கூடாது’

■ ஆ.ரமேஸ்.

ஆசிரியர் சமூகம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் முன் வைக்கும் கோரிக்கைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் எனத் தெரிவித்துள்ள தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்க பொது செயலாளர் எஸ். பாலசேகரம் அதைவிடுத்து ஆசிரியர் சமூகத்தை வீதிக்கு இறக்கி அழகு பார்க்கும் செயற்பாட்டை அரசாங்கம் தவிர்த்து கொள்ள வேண்டும் என்றார்.

நுவரெலியாவில் நேற்று (12) காலை இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

“இலங்கையில் சகல மாவட்டங்களிலும் இயங்கும் ஆசிரியர் சங்கங்களை ஒன்றிணைத்து, தேசிய ஆசிரியர் தொழிற்சங்கமாக ஓர் அமைப்பை உருவாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குப் பொதுவான கோரிக்கைகளை முன்வைத்து, அரசாங்கத்தை வலியுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் எமது சங்கத்துக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஆசிரியர் சமூகம் சார்ந்தவர்கள் தொடர்ச்சியாக ஆசிரியர், அதிபர் இடமாற்றங்கள், உள்ளிட்ட கஷ்ட பிரதேச பாடசாலைகளில் நிலவும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பிரச்சினைகள், எழுத்துப் பணியைக் குறைத்து மாணவர் சமூகத்துக்கான சேவைகளை சரியாக வழங்குவதில் உள்ள பிரச்சினைகள் வாழ்க்கைச் செலவு தொடர்பில் உள்ள சிக்கல்கல்கள் என எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது” என்றார்.



# லெதண்டியிலும் வழங்கப்பட்டது

■ எம்.கிருஸ்ணா

சுயசக்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மொகான் ஜீ நிறுவனத்தின் அனுசரணையில், நோர்வூட், லெதண்டி கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட முதியவர்கள், விசேட தேவையுடையவர்களின் குடும்பங்களுக்கு உலரணவு பொதிகளும் ஆடைகளும் நேற்று (12) வழங்கி வைக்கப்பட்டன.

சுயசக்தி நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் செல்வராஜ் தலைமையில்,பிரதேச சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.








# உபகரணங்கள் அன்பளிப்பு

■ கே.சுந்தரலிங்கம்

ஹட்டன் ஸ்ரீ சத்திய சாய்பாபா நிலையத்தால், கொரோனா தொற்றாளர்களுக்கு சிசிச்சை அளிக்கும் ஒரு தொகை மருத்துவ உபகரணங்கள் டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.







# கடவளைக்கும் விநியோகம்

■ இரா.யோகேசன்

தனிமைப்படுத்தப்பட்டுள்ள கினிகத்ஹேனை, கடவளை தோட்டத்திலுள்ள 8 குடும்பங்களுக்கு, 80ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள், அம்பகமுவ பிரதேச சபையின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.





# போலிப் பிரசாரங்களால் குட்டையை குழப்பிவிடாதீர்கள்

இன்னும் எத்தனை நாள்களுக்குத் தான் வீடுகளுக்குள்ளே முடங்கி கிடப்பது? என்ற கேள்விக்கு விடைக்கிடைத்தாற் போல, செப்டெம்பர் மாதத்துக்குள் முழு நாட்டையும் முழுமையாகத் திறப்பதற்கு வழியேற்படுத்தப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ கூறியிருக்கின்றமை, ஒவ்வொரு மனங்களிலும் பால் வார்த்தாற்போல இருக்கிறது.

கடந்த இரண்டு நாள்களில் தடுப்பூசி மருந்துகள் கிடுகிடுவென இறக்கப்பட்டுள்ளன. அதனை செலுத்திக்கொள்ளும் வேகத்தை அதிகரிக்கவேண்டும். இதுவரையிலும் செலுத்திக்கொள்ளாமல் இருப்பவர்கள், செலுத்திக்கொள்ளவேண்டும். இல்லையேல், மற்றவர்கள் பாதுகாப்பாக இருந்தாலும், தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளாதவர்களை கொரோனா வைரஸ் விட்டுவைக்காது. தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளும் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக இனங்காணப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் எண்ணிக்கையும் ஓரளவுக்கு குறைந்துவருகிறது, ஆக, கொவிட்-19க்கு தடுப்பூசியே முதலாவதும் இறுதியானதுமான தீர்வாக உள்ளது.

தடுப்பூசியை செலுத்திக்கொள்வதற்காக மக்கள் முண்டியடித்த போதெல்லாம் 'தடுப்பூசி கொத்தணி' உருவாக்கிவிடுமோ என்றொரு பேரச்சம் நிலவியது. ஆனால், மக்கள் காட்டிய அக்கறை, கடைப்பிடித்த சுகாதார வழிகாட்டல்களால், அவ்வாறானதொரு கொத்தணி ஏற்படவில்லை. ஒரு குப்பியிலிருந்து ஓர் ஊசியால் எடுக்கும் மருந்து, ஒருவருக்கு மட்டுமே செலுத்தப்படுகின்றது. அப்படி இருக்கையில், வரிசையில் முதலாவதாக நிற்பவருக்கு இருக்கும் தொற்று நோயொன்று, அவ்வரிசையில், அவருக்கு அடுத்தடுத்து நிற்பவர்களுக்கு எவ்வாறு தொற்றிக்கொள்ளும் என்பது சந்தேகமே.

தடுப்பூசிகள், இரத்த மாதிரிகளால் அல்ல; அனைத்து வகையான தடுப்பூசிகளும் மருந்துகளால் தயாரிக்கப்படுகின்றன. ஆகையால், எவருமே அச்சம் கொள்ளத்தேவையில்லை. தொற்றா நோய்களால் ஏற்கெனவே பீடிக்கப்பட்டிருப்போருக்கு, சிற்சில பக்க விளைவுகள் ஏற்படும்; அவை உலக நியதியாகும். ஆனாலும், கொரோனாவை தடுப்பதற்கான தடுப்பூசிகளால் 'எய்ட்ஸ்' பரவுதாக புரளியொன்று கிளப்பிவிடப்பட்டுள்ளது. அப்புரளிக்கு பதிலளித்திருக்கும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர், வைத்தியர் பிரசன்ன குணசேகர, "அப்படி பரவுவதற்கான வாய்ப்புகள் இல்லை"யென மறுதலித்துள்ளார்.

இந்நிலையில், போலியான பிரசாரங்களை முன்னெடுப்பதை தவிர்க்க வேண்டும். தொற்றுநோயொன்றை வேண்டுமென்றே தொற்றிக்கொள்வதற்கு யாரும் விரும்பமாட்டார்கள், அதைவிட, 'எய்ட்ஸ்' எனும் உயிர்க்கொல்லி, எவ்வாறான வழிகளிலும் புகுந்துவிடக்கூடாதென்பதில் விழிப்பாக, ஒவ்வொருவரும் இருப்பர். அவ்வாறான நிலைமையொன்று இருக்கையில், 'எய்ட்ஸ்' புரளியொன்று கிளப்பப்பட்டுள்ளது.

இது, தடுப்பூசி குறித்த அச்சத்துடன் வாழ்ந்துகொண்டிருப்போருக்கு, பேரச்சத்தை ஏற்படுத்திவிடும். அதுவே, கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும். சுகாதார திணைக்களத்தின் வழிகாட்டல்களை அச்சொட்டாகப் பின்பற்றுவதன் ஊடாக மட்டுமே, கொரோனா தொற்றிலிருந்து தற்காத்துக்கொள்ளமுடியாது. ஆகையால், போலிப் பிரசாரங்கள் முன்னெடுப்பதைக் கைவிட்டு, தடுப்பூசிக்காக ஊக்கப்படுத்த வேண்டும்.





தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

விருட்சங்களால் பூமிக்குக் கிடைக்கும் ஒட்சிசன் அளவை ஒத்ததாகக் கடற்பாசி மூலம் எமக்கு ஒட்சிசன் கிடைக்கின்றது. கடல் வளம் எத்தகைய பிரமாண்டமானது என்பதை எம்மால் முழுமையாக அறியமுடியாது.

மீன்வளம், பற்றியே பேசும் நாம், அதனை விட, எமக்குப் புரியாத அதிசயங்கள் பலவுண்டு. உலகில் முக்கால்பகுதி கடலால் சூழப்பட்டது.

கடல் மூலமே உலக நாடுகளுக்கு பொருள்கள் அனுப்பப்படுகின்றன. பல இரசாயனப் பொருள்களை இதன் மூலமே பெறுகின்றோம். கடல்வளம் இல்லாது விட்டால் இந்த உலகம் உயிர்பெறமுடியாது.

மழை பொழிய கடல் நீர்தான் பிரதானமானது. நீர் ஆவியாகி, ஆகாயத்தில் குளிர்ந்து போக, மழை பொழிகின்றது. இடி, மின்னல் கூட இணைந்து உலகைக் குளிரூட்டுவதால், நீர் எனும் அமிர்தம் எமக்கு கிடைக்கின்றது.

பூமி உயிர்பெற இயற்கை அன்னை பல வழிகளை கையாளுகின்றாள். ஆனால், மனிதர்கள் இயற்கையின் வளத்தை முழுமையாகப் பாதுகாப்பதில்லை. இலவசமாகக் பெறப்படுவதே எமக்கு செல்வங்களை வழங்குகின்றன.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### வட்டமிடும் முஸ்லிம் எம்.பிக்கள்

# வாய்ப்பைச் சமூகத்துக்காக பயன்படுத்துவார்களா?

மொஹமட் பாதுஷா

இலங்கை அரசியல் களநிலை சட்டென மாறியிருக்கின்றது. பெசில் ராஜபக்‌ஷ அமைச்சராகவும் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவியேற்று, நேரடி செயற்பாட்டு அரசியலுக்குள் நுழைந்ததன் மூலம் இது நடந்திருக்கின்றது.

பெசில் உள்ளே வந்ததால், ஆளும் கட்சிக்குள் இருக்கின்ற குழப்பங்கள் மட்டுமன்றி நாட்டில் நிலவுகின்ற அநேகமான பிரச்சினைகளையும் அவர் தீர்த்து வைத்துவிடுவார் என்று ஆளும் தரப்பினர் திடமாக நம்புகின்றனர்.

ஆனால். "அவர் என்ன அலாவுதீனின் அற்புத விளக்குடன் வருகின்றாரா?" என்று எதிரணியினர் கேள்வி எழுப்புகின்றனர். யார் அதிகாரத்துக்கு வந்தாலும், நாட்டில் தற்போதுள்ள நெருக்கடிகளை தீர்த்து வைக்க முடியாது என்பதே, அவர்களது நிலைப்பாடாக இருக்கின்றது.

69 இலட்சம் மக்களின் ஆணைப்படி ஆட்சிக்கு வந்த இவ்வரசாங்கம், 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம், மேலும் அதிகப்படியான அதிகாரங்களை வசப்படுத்தி வைத்திருந்தும் கூட நாட்டின் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்க்க முடியவில்லை என்பதே நிதர்சனமாகும்.

இந்நிலையில், பெசில் ராஜபக்‌ஷவுக்கு பாராளுமன்ற உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், அவர் வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்றும் ஆளும் தரப்பினர் கோரி நின்றனர். அந்த ஆசையும் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, இப்போதாவது நெருக்கடிகளை அரசாங்கம் தீர்த்துவைக்குமா என்பதே, மக்கள் மனங்களில் உள்ள எதிர்பார்ப்பாகும்.

பெசிலின் மீள்வருகையை, பெருந்தேசிய அரசியல்வாதிகள் இரு கோணத்தில் நோக்கினார்கள் என்றால், அநேகமான முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த மாற்றத்தை அல்லது திருப்பத்தை, தமக்கு சாதகமானதாகவே நோக்குகின்றார்கள்.

முன்னதாக, ஒருகுறிப்பிட்ட காலப்பகுதியில் பெசிலையும் ஏனைய ராஜபக்‌ஷர்களையும் விமர்சித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லோரும், இடைப்பட்ட காலத்தில் 'கள்ளமௌனம்' காத்தனர். அவர்கள் கூட, இப்போது 'நான் முந்தி நீ முந்தி' என, அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் இருந்து, இதனை இலகுவாகவே புரிந்து கொள்ளலாம்.

எனவே, இந்த மாற்றம் முஸ்லிம் சமூகத்துக்கு எவ்வாறான அனுகூலங்களைக் கொண்டு வரப் போகின்றது? முஸ்லிம் அரசியல் தலைவர்களும் எம்.பிக்களும் இந்தச் சந்தர்ப்பத்தை, தமது சொந்த இலாபத்துக்காகவா அல்லது சமூக நலனுக்காகவா பயன்படுத்தப் போகின்றார்கள் என்பதே இப்போதுள்ள வினாவாகும்.

பெசில் ராஜபக்‌ஷ, அரசியலில் சத்தமில்லாமல் காய்நகர்த்துவதில் வல்லவர் என்பது பொதுவான அபிப்பிராயமாகும். மறுபுறத்தில், மஹிந்த ராஜபக்‌ஷ அரசாங்கத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததுடன் இதன்மூலம் முஸ்லிம்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அபிவிருத்திசார் அனுகூலங்களையும் அடைந்து கொண்டனர் என்பதை மறுக்கவியலாது.

ஆனால், 2015, 2019, 2020 தேர்தல்கள், மற்றும் 52 நாள் நெருக்கடி போன்ற இக்கட்டான நிலைமைகளில் பிரதான முஸ்லிம் கட்சிகள், ராஜபக்‌ஷர்களுக்கு எதிராக நின்றதாலும், முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள பிம்பமே, இந்த ஆட்சியின் முதலீடு என்பதாலும் முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் முக்கிய தலைவர்களையும் ராஜபக்‌ஷர்கள் சற்றுத் தூரமாகவே நிறுத்தி வைத்திருக்கின்றனர்.

சமகாலத்தில், இன்னுமொரு நகர்வு மிக சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்படுவதையும் கூர்ந்து கவனிப்போரால் அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

அதாவது, தேசிய அரசியலில் ஒரு காலகட்டத்தில் கோலோச்சியவர்கள் பலர் இப்போது 'சீனி'லேயே இல்லாமல் ஆக்கப்பட்டு உள்ளார்கள். நேற்று முளைத்த அரசியல் காளான்கள், இன்று முக்கிய பாத்திரத்தை ஏற்றுள்ளனர்.

அதுபோலவே, முஸ்லிம் அரசியலிலும் முக்கிய தலைவர்களாக ராஜபக்‌ஷர்களால் கூட உயர்த்திப் பிடிக்கப்பட்டவர்கள் இன்று ஏதோ ஒரு வகையில் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற சந்தேகம் வலுவாகவே எழுகின்றது.

பெசில் ராஜபக்‌ஷவுக்கு மிக நெருக்கமாக இருந்த ரிஷாட் பதியுதீன் இப்போது இரண்டாவது தடவையாக தடுப்புக் காவலில் இருக்கின்றார். ரவூப் ஹக்கீம் மீதும் பயங்கரவாத முத்திரை குத்துவதற்குக் கடுமையான பிரயத்தனங்கள் எடுக்கப்படுகின்றன.

மஹிந்த மற்றும் பெசில் மூலம் நிறைய அபிவிருத்திகளைக் கொண்டு வந்த அதாவுல்லாவுக்கு ஒரு பிரதியமைச்சுப் பதவிகூட கொடுக்கப்படாமல் ஓரங்கட்டப்பட்டுள்ளார். ஆனால், முஸ்லிம் தலைவர்கள்தான் இப்படி இருக்கின்றார்களே தவிர முஸ்லிம் எம்.பிக்கள் ஆளும் தரப்புடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருக்கின்றார்கள். அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் இதற்கு நல்லதொரு அத்தாட்சியாக அமைந்தது.

ஹக்கீமும் ரிஷாட்டும் இதற்கு எதிர்த்து வாக்களித்தனர். 20இனை பொதுவாக எதிர்த்த முசாரப் எம்.பி., பெசில் ராஜபக்‌ஷவை எம்.பியாக்குவதற்கு வழிவகுக்கும் 'இரட்டைப் பிரஜாவுரிமை' தொடர்பான ஏற்பாட்டுக்கு ஆதரவளித்தார். இவ்விரு கட்சிகளின் மற்ற எல்லா எம்.பிக்களும் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே நின்றனர் என்பது, இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

இவ்வாறு அரசாங்கத்துடன் இணங்கிப் போவது, முஸ்லிம் சமூகத்துக்காகவே என்று எம்.பிக்கள் சொல்லிக் கொண்டாலும், அவர்களது செயற்பாடுகள் அதனை நம்பும்படியாக இருக்கவில்லை.

ஏனெனில், இப்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி முன்னாள் எம்.பிக்கள் கட்சித் தலைவர்களும் மக்களின் நலனைக் காரணம்காட்டி, இதற்கு முன்னர் பல தீர்மானங்களை எடுத்திருக்கின்றார்கள்; பல நகர்வுகளைச் செய்திருக்கின்றார்கள்.

'இது பிழை' என்று மக்களுக்குச் சொன்னதை, பின்னர் அவர்களே 'இதுதான் சரி' என்று நியாயப்படுத்திய சம்பவங்கள் ஏராளம் உள்ளன.

முஸ்லிம் சமூக நலனுக்காக என்று அவர்கள் கூறினாலும், உண்மையில் நடந்தது என்ன? எதைப் பெறுவதற்காக இந்த நாடகம் ஆடுகின்றார்கள் என்பதெல்லாம் மக்கள் அறியாத சங்கதியல்ல. எனவே, இப்போது "பெசில் வந்ததால், நாங்கள் நல்லதை நடத்திக் காட்டுவோம்" என்று கூறுவதை, அது நடக்கும் வரைக்கும் நம்ப முடியாத நிலையே உள்ளது.

முஸ்லிம் சமூகத்துடன் பெசிலுக்கு நெருக்கம் உள்ளது என்ற அடிப்படையில், அவரது வருகை சில சாதக நிலைமைகளைக் கொண்டு வரலாம் என்று கோட்பாட்டு ரீதியாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், இந்த நெருக்கத்தை கடந்த காலத்தில் நாசமாக்கியது இனவாதமும், முஸ்லிம் அரசியல்வாதிகளின் அற்பத்தனமான நகர்வுகளும்தானே? அப்படியென்றால் இப்போது மட்டும் எந்த அடிப்படையில் நம்புவது?

பெசில் ராஜபக்‌ஷவால் நாட்டில் இருக்கின்ற எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விடலாம் என்பது யதார்த்தத்தை மீறிய எதிர்பார்ப்பாகும். சமூகத்துக்காகக் கூட அறிக்கைவிடாத முஸ்லிம் எம்.பிக்களுள் பலர், இப்போது அமைச்சர் பெசிலுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்; மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். அதுமட்டுமன்றி. முஸ்லிம் கட்சிகளில் உள்ள பல எம்.பிக்கள் தமக்கு அமைச்சு அல்லது பிரதியமைச்சு தர வேண்டும் என்று, பெசிலைச் சுற்றி வட்டமிடுகிறார்கள்.

சிறுபான்மைத் தரப்புகளையும் உள்வாங்கிச் செயற்பட அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இராஜாங்க அமைச்சுப் பதவியையேனும் பெற்றுக் கொள்ள ஒரு சிலர் ஒற்றைக்காலில் நிற்பதாக கூறப்படுகின்றது.

இதுதான் இங்கே பிரச்சினை! தேசிய அரசியலில், பெசிலின் உள்வருகையால் முஸ்லிம் சமூகத்துக்கும் சாதகமான வாய்ப்புகள் ஏற்படலாம் என்றாலும், அதனை முஸ்லிம் தலைவர்களும் பதவிகளுக்காக ஆலாய்பறக்கும் எம்.பிக்களும் தமக்காகப் பயன்படுத்துவார்களா? அல்லது, சமூகத்துக்காகப் பயன்படுத்துவார்களா என்பதிலேயே அதன் விளைபயன் தங்கியிருக்கின்றது.

## கடிதங்கள்

### புனரமைப்பை விரைவுபடுத்துக

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட வடலிக்குள கிராம பொதுச் சந்தைக் கட்டடம், நீண்ட காலமாக புனரமைக்கப்படாது, பகுதியளவில் சேதமடைந்து காணப்படுகின்றது.

அத்தோடு, சூழவுள்ள பகுதி பற்றைக் காடுகளாகவும் காணப்படுகின்றது. இதைப் புனரமைத்துத் தருமாறு, குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்கிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, தவிசாளரின் முயற்சியின் காரணமாக, சந்தைக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இந்த ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென, பொதுமக்கள் வேண்டிநிற்கின்றனர்.

– எப். முபாரக்



சென்னை

# மக்கள் மன்றத்தை கலைத்தார் ரஜினி

## அரசியலுக்கு முற்றுப்புள்ளி

வருங்காலத்தில் அரசியலில் ஈடுபடப்போகும் எண்ணம் எனக்கில்லை என திட்டவட்டமாக கூறியுள்ள நடிகர் ரஜினிகாந்த், தனது மக்கள் மன்றத்தை கலைத்துவிட்டு, ரசிகர் மன்றமாக செயற்படும் என அறிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த், தன் உடல் நிலையை காரணம்காட்டி, அரசியலுக்கு வரப்போவதில்லை என ஏற்கெனவே அறிவித்திருந்தார். இந்நிலையில், நேற்று (12) சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள, ராகவேந்திரா திருமண மண்டபத்தில், தனது மக்கள் மன்ற நிர்வாகிகளை ரஜினி காந்த சந்தித்தார்.



இந்நிலையில் மக்கள் மன்ற நிர்வாகிகளுடனான சந்திப்பின் பிறகு, ரஜினி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'கால சூழலால் நாம் நினைத்தது சாத்தியப்படவில்லை. வருங்காலத்தில் அரசியலில் ஈடுபடப்போகும் எண்ணம் எனக்கில்லை. ஆகையால் ரஜினி மக்கள் மன்றத்தை கலைத்துவிட்டு, சார்பு அணிகள் எதுவுமின்றி, இப்போதைக்கு ரஜினி மக்கள் மன்றத்தில் உள்ள செயலாளர்கள், இணை, துணை செயலாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் மக்கள் நலப்பணிக்காக முன்பு போல ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றமாக செயற்படும் என்று அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

லக்னோ

## சனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும்



சமுதாயத்துக்கும், மாநிலத்துக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் தடையாக உள்ள, மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என, உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான, பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது. மக்கள் தொகையை கட்டுப்படுத்தும் வகையில், புதிய சட்டமூலத்தை மாநில அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தச் சட்டமூலத்தில், இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்களுக்கு அரசாங்கத்தின் சலுகைகள், அரசாங்க வேலை கிடைக்காது. மேலும், உள்ளூராட்சித் தேர்தலிலும் போட்டியிட முடியாது. இந்தச் சட்டமூலத்தை முஸ்லிம்களுக்கு எதிரானது என, சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.


இந்நிலையில், மாநிலத்தின் 2021 - 2030ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கொள்கையை யோகி ஆதித்யநாத் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

மக்கள் தொகை பெருக்கம், வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. மக்கள் தொகையை கட்டுப்படுத்த பல நாடுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு நல்ல பலனும் கிடைத்துள்ளது. நம் நாட்டிலும், மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பலனளித்துள்ளன. ஆனாலும், அது போதவில்லை எனக்கூறினார்.

லக்னோ

### ஆளுங்கட்சியினரின் கடத்தல் முயற்சி;

## படம்பிடித்த நிருபருக்கு அடிஉதை



உத்தரப் பிரதேசத்தில் உள்ளூராட்சித் தேர்தலையொட்டி பல மாவட்டங்களில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது, கவுன்சிலர் ஒருவரை ஆளுங்கட்சியினர் கடத்திச் செல்ல முயன்றபோது, அதனைப் படம்பிடித்ததற்காகத் தொலைக்காட்சி நிருபரை அங்கிருந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி, கடுமையாகத் தாக்கியுள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற வட்டார பஞ்சாயத்து தலைவர் தேர்தலில், 17 மாவட்டங்களில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக பாரதிய ஜனதா கட்சி, சமாஜ்வாதி கட்சி நிர்வாகிகள் கடுமையாகத் தாக்கிக் கொண்டனர். தங்களை வாக்களிக்க விடாமல் ஆளுங்கட்சியினர் தடுப்பதாக, எதிர்க்கட்சி கவுன்சிலர்கள் பல இடங்களில் புகார் தெரிவித்துள்ளனர்.

திருப்பதி


### 'செல்பி' மோகம் ஆபத்தானது!

## நீரில் மூழ்கி நால்வர் பலி

'செல்பி' மோகத்தால் ஏற்பட்ட விபரீதம், தமிழகத்தைச் சேர்ந்த நான்கு பேரின் உயிர் நீரில் காவுகொண்ட சம்பவம் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

சென்னையைச் சேர்ந்த புதுத் திருமணத் தம்பதிகள் ஆந்திரா - தமிழக எல்லையிலுள்ள தடா நீர்வீழ்ச்சி சுற்றுலா தளத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போது, வழியில் கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த தங்கள் நண்பர்கள் இருவரை அழைத்துச் சென்றுள்ளனர். கொரோனா தடுப்பு விதிமுறைகள் அமலில் இருப்பதால், சுற்றுலா தளம் மூடப்பட்டிருந்தது.

இதனால் அருகில் இருந்த தெலுங்கு கங்கா கால்வாய்க்குச் சென்றுள்ளனர். அப்போது நண்பரொருவர், செல்பி எடுக்கும்போது கால் தவறி கால்வாயில் விழுந்துள்ளார். இதைக் கவனித்த நண்பர்களும் அவரைக் காப்பாற்ற நீரில் குதித்தனர். ஆனால், நீரோட்டத்தில் நண்பர்களும் அடித்து செல்லப்பட்டனர். தீவிர தேடுதலுக்குப் பின்னர், உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




சென்னை

### ஏடிஸ் கொசுக்களால் தான்

## ஸிகா வைரஸ் பரவுகிறது

கேரளாவின் திருவனந்தபுரத்தை சேர்ந்த கர்ப்பிணியொருவருக்கு ஸிகா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இக்கர்ப்பிணியைத் தொடர்ந்து, மேலும் 14 பேருக்கு ஸிகா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக டெங்கு காய்ச்சலை பரப்பும் 'ஏடிஸ் கொசுக்கள்' தான் ஸிகா வைரஸ் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், கொசு ஒழிப்பு நடவடிக்கையில் தமிழக அரசாங்கம் தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில், கொசு மூலம் ஸிகா வைரஸ் பரவுவதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்'என மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

மேலும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுகையில், கேரள எல்லைப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கேரள எல்லை பகுதியிலுள்ள யாருக்கும் ஸிகா வைரஸ் பாதிப்பு இல்லை. கேரளாவில் இருந்து தமிழகம் வரும் மக்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது என்று கூறினார்.

மாரத்தஹள்ளி

### சந்தேகம் கொண்ட கணவன்

## மனைவியின் முகத்தில் கத்தியால் குத்தினான்

மனைவி முகத்தில் கத்தியால் குத்தி, கொலை செய்ய முயற்சித்து, சொந்த ஊருக்கு தப்பியோட முயன்ற கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பீஹாரை சேர்ந்த தம்பதியர், இரண்டு ஆண்டுக்கு முன், பெங்களூருக்கு வந்துள்ளனர். இத்தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். மாரத்தஹள்ளியின், அடுக்குமாடிக் குடியிருப்பிலுள்ள பின்பகுதியில் வசித்துவந்துள்ளனர்.மற்றொரு அடுக்குமாடி குடியிருப்பில், வீட்டுவேலை செய்து மனைவி குடும்பத்தை நடத்துகிறார். அவரது கணவன் எந்த வேலையும் செய்யாமல், வீட்டிலேயே இருப்பது வழக்கம்.

தினமும் மதுபானம் குடித்து, மனைவிக்கு தொல்லை கொடுத்து வந்துள்ளார். சமீப நாள்களாக மனைவியின் நடத்தையில், சந்தேகம் கொண்ட கணவர், மனைவியை கொலை செய்வதற்காகவே, பீஹாரிலிருந்து கத்தி வாங்கி வந்து, கட்டிலுக்கு அடியில் ஒளித்து வைத்திருந்தார். ஜூலை 6ஆம்திகதி மதியம் 3.00 மணியளவில், மனைவியிடம், தகராறு செய்த கணவன், கத்தியால் மனைவி முகத்தில் குத்தியதில்,மனைவி மயங்கி விழுந்துள்ளார். அவர் இறந்துவிட்டதாகக் கருதி தப்பியோடினார். அக்கம், பக்கத்தினர் மருத்துவமனையில் சேர்த்து, பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். மாரத்தஹள்ளி பொலிஸார் கைது செய்தனர்.





# காதல் தோல்வி



மலையாளத்தில் வெற்றிகரமாக ஓடிய 'பிரேமம்'திரைப்படம் மூலம் நடிகையாக அறிமுகமானவர் அனுபமா பரமேஸ்வரன்.


இதையடுத்து தனுஷ் நடிப்பில் வெளியான 'கொடி'திரைப்படம் மூலம் தமிழில் அறிமுகமான இவர், தற்போது 'தள்ளிப்போகாதே' திரைப்படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக நடித்து இருக்கிறார்.

சமூக வலைதளங்களில் சுறுசுறுப்பாக இருக்கும் நடிகை அனுபமா, அண்மையில் ரசிகர்களுடன் கலந்துரையாடினார். அப்போது ரசிகர் ஒருவர், "நிஜ வாழ்க்கையில் நீங்கள் யாரையாவது காதலித்து இருக்கிறீர்களா?" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த அனுபமா பரமேஸ்வரன் , "நான் ஒருவரை காதலித்து இருக்கிறேன். ஆனால், அந்தக் காதல் ரொம்பக் காலம் நீடிக்கவில்லை. அது தோல்வி அடைந்து விட்டது. இப்போது நான் யாரையும் காதலிக்கவில்லை" என்றார்.



# ஹிந்திக்கு செல்லும் சூரரைப்போற்று



இறுதிச்சுற்று திரைப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து இயக்குநர் சுதா கொங்கரா இயக்கிய திரைப்படம் சூரரைப்போற்று.

சிம்ப்ளி ஃப்ளை டெக்கான் நிறுவனர் கெப்டன் ஜி.ஆர். கோபிநாத்தின் வாழ்க்கை வரலாற்றை தழுவி உருவாக்கப்பட்ட இந்த திரைப்படத்தில் நடிகர் சூர்யா, நெடுமாறன் ராஜாங்கம் எனும் கதாபாத்திரத்தில் கதாநாயகனாக நடித்திருந்தார்.

பொம்மி கதாபாத்திரத்தில் கதாநாயகியாக நடிகை அபர்ணா பாலமுரளியும் நடிகை ஊர்வசி, கருணாஸ், காளி வெங்கட், விவேக் பிரசன்னா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது சூரரைப்போற்று திரைப்படத்தின் ஹிந்தி ரீமேக் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொலிவுட்டின் பிரபல தயாரிப்பு நிறுவனமான அபுடன்டியா என்டர்டெயின்மென்ட் சார்பில் தயாரிப்பாளர் விக்ரம் மல்ஹோத்ரா உடன் இணைந்து 2டி என்டர்டெய்ன்மெண்ட் சார்பில் நடிகர் சூர்யா இணைந்து தயாரிக்கும் சூரரைப்போற்று ஹித்தி திரைப்படத்தை இயக்குநர் சுதா கொங்கராவே இயக்குகிறார்.

விரைவில் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் பற்றிய அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிசியாகும் பிரபுதேவா



பொலிவுட்டில் முன்னணி இயக்குநராக இருக்கும் பிரபுதேவா, தமிழ்த் திரைப்படங்களிலும் நடித்து வருகிறார். இவர் நடித்துள்ள 'யங் மங் சங், பொன் மாணிக்கவேல், பஹீரா' போன்ற திரைப்படங்கள் வெளியீட்டுக்குத் தயாராகி வருகின்றன.

இந்த நிலையில், அவர் அடுத்தடுத்து நடிக்க உள்ள 4 புதிய திரைப்படங்கள் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி 'பிளாஷ்பேக்', 'மை டியர் பூதம்', பெயரிடப்படாத 2 திரைப்படங்களில் பிரபுதேவா நடிக்கிறார். இந்த நான்கு திரைப்படங்களையும் அபிஷேக் பிலிம்ஸ் சார்பாக ரமேஷ் பி.பிள்ளை தயாரிக்கிறார்.

இவற்றுள் பிளாஷ்பேக் திரைப்படத்தை டான் சாண்டி இயக்குகிறார். இவர் "மகாபலிபுரம், கொரில்லா" போன்ற திரைப்படங்களை இயக்கி பிரபலமானவர். பிரபுதேவாவுக்கு ஜோடியாக ரெஜினா நடித்துள்ளார்.

அடுத்ததாக இயக்குநர் சற்குணத்திடம் துணை இயக்குநராக பணியாற்றி 'மஞ்ச பை' திரைப்படம் மூலம் இயக்குநராக முத்திரை பதித்த ராகவன், இயக்கும் 'மை டியர் பூதம்'திரைப்படத்தில் பிரபுதேவா ஹீரோவாக நடிக்கிறார்.

இதுதவிர குலேபகாவலி இயக்குநர் கல்யாணுடன் ஒரு திரைப்படத்திலும், அறிமுக இயக்குநர் அமல் கே.ஜோபி இயக்கும் புதிய திரைப்படத்திலும் நடிக்க பிரபுதேவா ஒப்பந்தமாகி உள்ளார்.



# ஜெயம் ரவிக்கு புது ஜோடி


தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம்வருபவர் ஜெயம் ரவி. இவர் தற்போது மணிரத்னத்தின் 'பொன்னியின் செல்வன்', அகமத் இயக்கும் 'ஜன கன மன' போன்ற திரைப்படங்களை கைவசம் வைத்துள்ளார்.

இதுதவிர பூலோகம் திரைப்பட இயக்குநர் கல்யாண கிருஷ்ணன் இயக்கும் புதிய திரைப்படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்.

ஆரம்பக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், ஹீரோயினாக நடிக்க உள்ளது யார் என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி, நடிகை பிரியா பவானி சங்கர், ஜெயம் ரவிக்கு ஜோடியாக நடிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது. விரைவில் இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வருட இறுதியில் வருகின்றது 'வலிமை'




'வலிமை' படப்பிடிப்பு முழுமையாக நிறைவுற்றது எனவும், இந்த ஆண்டு இறுதியில் திரைப்படம் வெளியாகும் என்று படக்குழுவினர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர்.

ஹெச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடித்து வரும் 'வலிமை'. திரைப்படத்தை போனி கபூர் தயாரித்து வருகின்றார். இந்தத் திரைப்படத்தின் பூஜை 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஹைதராபாத்தில் படப்பிடிப்பு தொடங்கப்பட்டது. கொரோனா அச்சுறுத்தலால் படப்பிடிப்பு தடைபட்டதால் படக்குழுவினர் எந்தவொரு தகவலையும் வெளியிடாமல் இருந்தனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் (11) திடீரென்று 'வலிமை' திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக், மோஷன் போஸ்டர் ஆகியவற்றை வெளியிட்டு, ரசிகர்களை மகிழ்வித்துள்ளது படக்குழு.

அதன்படி, 'வலிமை' படப்பிடிப்பு முழுமையாக முடிவுற்றது. இந்த ஆண்டு இறுதியில் திரைப்படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளது படக்குழு.

ஹெய்ட்டி

# ஜனாதிபதி கொலை: சூத்திரதாரி கைது

ஹெய்ட்டியின் முன்னாள் ஜனாதிபதி ஜொவெனெல் மொய்ஸேயின் கொலையில் பிரதான சூத்திரதாரி ஒருவரைக் கைது செய்துள்ளதாக அந்நாட்டுப் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

ஹெய்ட்டியைச் சேர்ந்த குறித்த நபரே கூலிப்படையினரை பணிக்கமர்த்தி முன்னாள் ஜனாதிபதி மொய்ஸேயை பதவியிலிருந்து அகற்றி பிரதியிட எதிர்பார்த்ததாக அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்நபர் ஹெய்ட்டிக்கு தனியார் ஜெட்டொன்றில் கடந்த மாத ஆரம்பத்தில் பணிக்கமர்த்தப்பட்ட



பாதுகாவலர்களுடன் வந்ததாகவும், ஜனாதிபதியாக பதவியேற்க விரும்பியதாக செய்தியாளர் மாநாடு ஒன்றில் தேசிய பொலிஸ் தலைவர் லியோன் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஏற்கெனவே தடுப்புக்காவலில் உள்ள ஒருவர் இவரைக் கைது செய்யும்போது தொடர்பு கொண்டதாகவும், அதற்கு வேறு இருவரை குறித்த நபர் தொடர்பு கொண்டதாக சார்ள்ஸ் மேலும் கூறியுள்ளார்.

முன்னதாக தாக்குதலாளிகள் இந்நபருக்கு பாதுகாப்பளிப்பதாக இருந்ததோடு, பின்னர் முன்னாள் ஜனாதிபதி மொய்ஸேக்கு பிடிவிறாந்தொன்று வழங்கப்பட்டதாக சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடாவில் வைத்தியர் ஒருவராகப் பணியாற்றுவதாக தரவுகள் வெளிக்காட்டுகின்றன.



ஐ. அமெரிக்கா

பிலிப்பைன்ஸ் படைகள் மீதான தாக்குதல்:

## சீனாவை மீண்டும் எச்சரிக்கும் ஐ. அமெரிக்கா

தென் சீனக் கடலில், பிலிப்பைன்ஸ் ஆயுதப் படைகள் மீதான தாக்குதல் ஒன்றானது 1951ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க - பிலிப்பைன்ஸ் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தை தூண்டும் என சீனாவை ஐ. அமெரிக்கா மீண்டும் நேற்று முன்தினம் எச்சரித்துள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் படி இரண்டு தரப்பின் மீதும் பசுபிக் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஆயுதந் தரித்த தாக்குதல் ஒன்றானது மற்றையதின் அமைதிக்கும், பாதுகாப்புக்கு ஆபத்தானது என்றும், பொதுவான ஆபத்துகுகளை அரசியலைமைப்பின்படி இதற்கு செயற்படுவோம் என்றவாறான உள்ளது.

சீனா

## ஐ. அமெரிக்க கப்பலை விரட்டிய சீனா

சீனக் கடற்பரப்புக்குள் பார்சல் தீவுகளுக்கு அருகில் சட்ட ரீதியற்ற முறையில் நேற்று நுழைந்த ஐக்கிய அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்றை துரத்தியதாக சீன இராணுவம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

சீன அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் பார்சல் தீவுகளின் கடற்பரப்புகளுக்குள் நுழைந்த யு.எஸ்.எஸ் பென்ஃபோல்ட் கப்பலானது சீனாவின் இறையாண்மையை மீறியதாகவும், தென் சீனக் கடலில் நிலைத்த தன்மையைக் குலைப்பதாகவின் மக்களின் விடுதலை இராணுவத்தின் தென் கட்டளை குறிப்பிட்டுள்ளது.





அமெரிக்காவின் மேற்குப் பிராந்தியத்தில் வெப்ப அலையால் பாதிக்கப்பட்டு, சில இடங்களில் வரலாற்றில் உச்ச அளவில் வெப்பநிலை பதிவான நிலையில், காட்டுத்தீ சம்பவங்கள் பல ஏற்பட்டிருந்தன.

## காட்டுத்தீ...



ஐ. அமெரிக்கா

## விண்வெளியின் எல்லைக்குச் சென்ற பிரன்சன்

தனது வேர்ஜின் கலாசிட்டிக் றொக்கெட் விமானத்தில் விண்வெளியின் எல்லையை, செல்வந்தரான சேர் றிச்சர்ட் பிரன்சன் அடைந்துள்ளார்.

பிரித்தானிய தொழில்முயற்சியாளரான பிரன்சன், ஐக்கிய அமெரிக்காவின் நியூ மெக்ஸுக்கோவுக்கு மேலேயே, 17 ஆண்டுகளாக அவரது நிறுவனம் உருவாக்கிய வாகனத்தில் பறந்திருந்தார்.

அந்தவகையில், விண்வெளிச் சுற்றுலாவில் முதலாமவராக தன்னை பிரன்சன் நிலைநிறுத்தியுள்ளார்.

85 கிலோ மீற்றர் உயரத்தை பிரன்சன் அடைந்திருந்தார்.

பிரன்சனுடன், இரண்டு விமானிகளும், மூன்று பணியாளர்களும் பறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அடுத்தாண்டு முதல் வாடிக்கையாளர்களுக்கு இப்பயணங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 250,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இப்பயணத்துக்கு 600 தனிநபர்கள் ஏற்கெனவே பணம் செலுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து

## மருத்துவ பணியாளர்கள் 600 பேருக்கு தொற்று

சீனாவின் 'சினோவக்' தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்ற 600க்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானதாக தாய்லாந்து சுகாதார அமைச்சு நேற்று முன்தினம் (11) தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தாதியொருவர் உயிரிழந்ததுடன், இன்னொரு மருத்துவப் பணியாளர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

அந்தவகையில், ஆபத்துள்ள மருத்துவப் பணியாளர்களுக்கு நோயெதிர்ப்பை தூண்டுவதற்கு மூன்றாவது தடுப்பூசி தேவை என நிபுணர் குழாம் பரிந்துரைத்துள்ளதாக செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



யூரோ: பெனால்டியில்

# இங்கிலாந்தை வீழ்த்தி சம்பியனான இத்தாலி

யூரோ கிண்ணத் தொடரில் இத்தாலி சம்பியனானது.

வெம்ப்ளியில் நேற்று அதிகாலை நடைபெற்ற இங்கிலாந்துடனான இறுதிப் போட்டியில் பெனால்டியில் வென்றே 53 ஆண்டுகளின் பின்னர் இத்தொடரில் இத்தாலி சம்பியனானது.




இப்போட்டியின் இரண்டாவது நிமிடத்திலேயே சக பின்களவீரர் கெய்ரான் ட்ரிப்பியர் வழங்கிய பந்தைக் கோலாக்கிய இங்கிலாந்தின் பின்களவீரரான லுக் ஷா இங்கிலாந்துக்கு முன்னிலையை வழங்கினார்.

எனினும், தொடர்ந்து போட்டியில் ஆதிக்கம் செலுத்திய இத்தாலி, இங்கிலாந்தின் அரைப் பகுதியை ஆக்கிரமித்ததுடன், தமது முன்களவீரர்கள் பெடெரிக்கோ சியெஸ்கா, லொரென்ஸோ இன்சீனியா மூலம் கோல் கம்பத்தையும் ஆக்கிரமித்தது.

இந்நிலையில், போட்டியின் 67ஆவது நிமிடத்தில் இத்தாலியின் பின்களவீரர் லியனார்டோ பொனுச்சி பெற்ற கோலின் மூலம் கோலெண்ணிக்கையை இத்தாலி சமப்படுத்தியது.

அந்தவகையில், போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் காணப்பட்ட நிலையில், மேலதிக நேரத்துக்கு போட்டி சென்றது.

இந்நிலையில், மேலதிக நேரத்திலும் கோலெதுவும் பெறப்படாத நிலையில் பெனால்டி மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டது.

அந்தவகையில், இங்கிலாந்தின் மார்க்கஸ் றஷ்ஃபோர்ட்டின் உதையானது கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியதுடன், ஜடோன் சஞ்சோ, புக்காயோ ஸாகாவின் உதைகளை இத்தாலியின் கோல் காப்பாளர் ஜல்லூயிஜி டொன்னருமா தடுத்திருந்தார். மறுப்பக்கமாக இத்தாலியின் அன்ட்ரியா பெலோட்டி, ஜோர்ஜினியோவின் உதைகளை இங்கிலாந்தின் கோல் காப்பாளர் ஜோர்டான் பிக்ஃபோர்ட் தடுத்திருந்தார்.

இறுதியில் 3-2 என்ற ரீதியில் பெனால்டியில் வென்று இத்தாலி சம்பியனானது.

இத்தொடரின் நாயகனாக டொனருமாவும், சிறந்த இளம் வீரராக ஸ்பெய்னின் பெட்ரியும் தெரிவாகினர்.



தனிமைப்படுத்தல் முடிந்து

## வெளியே வந்த வீரர்கள்

தேசிய குழாமில் எஞ்சியுள்ளவர்கள் அனைவருக்கும் எதிர்மறையான பி.சி.ஆர் முடிவுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து, தனிமைப்படுத்தலிருந்து வெளியேற இலங்கையணியின் வீரர்கள் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

வீரர்களுக்கு மட்டுமே இது பொருந்தும் என்ற நிலையில், நாளை வரையில் பயிற்சியாளர்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனெனில், துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் கிரான்ட் பிளவர், அணி ஆராய்வாளர் ஜி.டி. நிரோஷனுடன் பயிற்சியாளர்கள் நெருங்கிய தொடர்பில் இருந்ததாகக் கருதப்படுகிறது.




ஒற்றை டெஸ்ட் போட்டியில்

## சிம்பாப்வேயை வென்ற பங்களாதேஷ்

சிம்பாப்வேத் தலைநகர் ஹராரேயில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த ஒற்றை டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வேயை 220 ஓட்டங்களால் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 468/10 (துடுப்பாட்டம்: மகமதுல்லா ஆ.இ 150, லிட்டன் தாஸ் 95, தஸ்கின் அஹ்மண்ட் 75, மொமினுல் ஹக் 70 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிளஸிங்க் முஸர்பனி 4/94, டொனால்ட் ட்ரிபானோ 2/58, விக்டர் நயுச்சி 2/92, மில்டன் ஷும்பா 1/64, றிச்சர்ட் நகரவா 1/83)

சிம்பாப்வே: 276/10 (துடுப்பாட்டம்: தகுட்ஸ்வன்ஷே கைடானோ 87, பிரெண்டன் டெய்லர் 81, மில்டன் ஷும்பா 41, றெஜிஸ் சகப்வா ஆ.இ 31 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 5/82, ஷகிப் அல் ஹஸன் 4/82, தஸ்கின் அஹ்மட் 1/46)

பங்களாதேஷ்: 284/1 (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ ஆ.இ 117, ஷட்மன் இஸ்லாம் ஆ.இ 115, சைஃப் ஹஸன் 43 ஓட்டங்கள். பந்துவீச்சு: றிச்சர்ட் நகரவா 1/36)

சிம்பாப்வே: 256/10 (துடுப்பாட்டம்: பிரெண்டன் டெய்லர் 92, டொனால்ட் ட்ரிபானோ 52, பிளஸிங்க் முஸர்பனி ஆ.இ 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 4/66, தஸ்கின் அஹ்மட் 4/82, ஷகிப் அல் ஹஸன் 1/44, எபடொட் ஹொஸைன் 1/39) போட்டியின் நாயகன்: மகமதுல்லா



## இங்கிலாந்தை வென்ற இந்தியா

ஹொவ்ஃவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து பெண்கள் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய பெண்கள் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 148/4 (20 ஓவ. )
(துடுப்பாட்டம்: ஷெஃபாலி வர்மா 48 (38), ஹர்மன்பிறீட் கௌர் 31 (25), தீப்தி ஷர்மா ஆ.இ 24 (27), ஸ்மிருதி மந்தனா 20 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: மடி வில்லியர்ஸ் 1/9 [2], நட் ஷிவர் 1/20 [4], சோஃபி எக்லெஸ்ஸ்டோன் 0/22 [4])

இங்கிலாந்து: 140/8 (20 ஓவ. )
(துடுப்பாட்டம்: தமி பியூமௌன்ட் 59 (50), ஹீதர் நைட் 30 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: பூனம் யாதவ் 2/17 [4], தீப்தி ஷர்மா 1/18 [4], ஸ்னேஹ் ராணா 0/21 [4])

போட்டியின் நாயகி: தீப்தி ஷர்மா

## விம்பிள்டன்: சம்பியனான ஜோக்கோவிச்

பிரித்தானியாவின் தலைநகர் இலண்டனில் நடைபெற்று வந்த விம்பிள்டன் டென்னிஸ் தொடரில், உலகின் முதல் நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச் சம்பியனாகியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில், தற்போதைய உலகின் எட்டாம் நிலை வீரரான இத்தாலியின் மட்டியோ பெரெட்டனியை எதிர்கொண்ட சேர்பியாவின் ஜோக்கோவிச், 6-7 (4-7), 6-4, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வென்று தனது 20ஆவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியிருந்தார்.

அந்தவகையில், அதிக கிராண்ட் ஸ்லாம் பட்டங்களாக 20 பட்டங்களைக் கைப்பற்றிய உலகின் ஒன்பதாம் நிலை வீரரான சுவிற்ஸர்லாந்தின் றொஜர் பெடரர், மூன்றாம் நிலை வீரரான ஸ்பெய்னின் ரஃபேல் நடாலின் சாதனையை ஜோக்கோவிச் சமப்படுத்தியிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 12 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.